**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**PW 4- OS. No. 38/2017**

2023 ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு புஷ்பராஜ் | தொழில் : |
| த/பெ. : திரு, வெங்கடசாமி | வயது : 59 |
| முகவரி : | |

**அழைப்பாணையில் பேரில் வாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 3 ம் தரப்பினர். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பபட்டது. நான் திருப்பூர் முருகம்பாளையம் பொது சுத்திரிகரிப்பு நிலையத்தில் பொது மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க இயக்குனருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்க தொடர்பாக சாட்சியம் அளிக்க அவர் எனக்கு அனுமதி கடிதம் அளித்துள்ளார். அனுமதி கடிதம் அது வாதி தரப்பில் X3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.த.சா 16 எங்களுடைய நிறுவனம் வழங்கிய சான்று தான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.த.சா 21 ஆனது பிரின்ஸ் டையிங் நிறுவனம் எங்களுக்கு தரவேண்டிய தொகைக்கான அனுப்பிய கடிதம் ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.த.சா 12-13 ரசீதுகள் எங்களது நிலையத்தால் வழங்கப்பட்டுள்ளது தான் அந்த சமயத்தில் நான் பணியில் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.த.சா 35 ஆனது பிரின்ஸ் டையிங் நிறுவனத்திடமிருந்து எங்களுக்கு நீண்ட நாட்களாக வர வேண்டிய தொகைக்காக பிரின்ஸ் டையிங் நிறுவனத்தின் உரிமையாளரின் வாரிசுகளுக்க அனுப்பட்ட கடிதம் ஆகும். பிரின்ஸ் டையிங் நிறுவனத்தின் உரிமையாளர் இறந்து விட்டபடியால் அவருடைய வாரிசுகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.த.சா 22 ரத்தினசாமிக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஆகும். மேற்படி கடித்தத்துடன் சரஸ்வதி மற்றும் சுமதி ஆகியோரின் கடிதங்களும் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது. அழைப்பாணையில் 5.8.2015 தேதியிட்ட நிர்வாகத்தின் நிர்வாக குழு தேர்தலில் வாக்களித்த நபர்களில்

பட்டியல் கோரப்பட்டுயிருந்தது. பல வருடங்கள் ஆனதால் மேற்படி விவரம் எங்களுடைய அலுவலக கோப்பில் இல்லை. எனவே அதனை தாக்கல் செய்ய இயலவில்லை.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. தற்போது என்னிடம் காட்டப்பட்ட வா.த.சா 12,13,16 மற்றும் 22 எங்களது நிறுவனதிலிருந்து வாதிக்கு அனுப்பட்டததை காட்ட ஆதாரம் ஏதாவது உள்ளதா என்றால் அலுவலகத்தில் ஆவணங்களை பரீசிலித்து தான் சொல்லமுடியும். வா.த.சா 22 உடன் இணைக்கப்பட்டுள்ள சரஸ்வதி மற்றும் சுமதி ஆகியோர் கொடுத்த கூறப்படும் கடிதம் ஆனது எந்த தேதியில் பெறப்பட்டது என்பதற்கு மேற்படி ஆவணத்திலேயே பதிவு எதுவும் இல்லை என்றால் ஆமாம். மேற்படி கடிதங்கள் எங்களுடைய அலுவலகத்தில் பெறப்பட்டதற்கான குறிப்பு எதுவும் இல்லை என்றால் ஆமாம். தபாலில் வந்து யிருந்தால் அது ஆவணத்தில் பதிவு செய்யப்பட்டுயிருக்கும் என்றால் ஆமாம். அலுவலகத்தில் ஆவணங்களை பரீசிலித்து தான் சொல்லமுடியும்.பிரின்ஸ் டையிங் நிறுவனம் ஆனது தனிநபர் நிறுவனம் என்றால் எங்களுடைய நிறுவனத்தில் உள்ள ஆவணப்படி ஆமாம். 2011 லிருந்து மேற்படி நிறுவனம் செயல் படவில்லை என்றால் ஆமாம். செலுத்த நிலுவை தொகையும் உள்ளது என்றால் ஆமாம்.

**7 ம் பிரதிவாதி தரப்பபில் குறுக்கு விசாரணை**

1. சுத்திரிகரிப்பு ஆவணங்கள் படி பிரின்ஸ் டையிங் நிறுவனம் ஆனது தனிநபர் நிறுவனம் என்றால் ஆமாம்.

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI
Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.03.13 18:42:10 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.